# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

## 2007 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, இலங்கைச் சிறுவர், இளைஞர் அரங்கேற்று மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

*(2007 ஆம் ஆண்டு சனவரி மாதம் 29 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

2007, பெப்புருவரி மாதம் 02 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை : ரூபா 9.25** **தபாற் செலவு : ரூபா 5.00**

## 2007 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, இலங்கைச் சிறுவர், இளைஞர் அரங்கேற்று மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[2007 ஆம் ஆண்டு சனவரி மாதம் 29 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஓ.கூ.– 14/2004

### இலங்கைச் சிறுவர், இளைஞர் அரங்கேற்று மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

"இலங்கைச் சிறுவர், இளைஞர் அரங்கேற்று மன்றம்" என அழைக்கப்படுவதும், அறியப்படுவதுமான கழகமொன்று சமுதாயத்தில் திறமையாகப் பணிபுரியவல்ல தெளிவான கலாசாரத் தனித்துவம்கொண்ட உள நலனும், உடல் நலனும் வாய்ந்த சமநிலையுடைய சிறுவர்களை உருவாக்கும் கருத்துடன் அரங்கேற்றுச் செயற்பாடுகளைப் பொறுப்பேற்கும், மேம்படுத்தும், அனுசரணை செய்யும் மற்றும் ஒன்றிணைக்கும் நோக்கத்துக்காகவும் அதன் உறுப்பினர்களால் உடன்பட்டுக்கொள்ளப்பட்ட விதிகளுக்கு அமைய கூறப்பட்ட கழகத்தோடு தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும், கருமங்களையும் பயனுற நிறைவேற்றுவதற்கும், கொண்டு நடாத்துவதற்கும் என இலங்கையில் இதற்கு முன்னர் உருவாக்கப்பட்டிருப்பதாலும் : முன்னுரை.

அத்துடன் சொல்லப்பட்ட கழகம் எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டு நடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்படுவதற்காக விண்ணப்பித்துள்ளதாதலாலும் மற்றும் அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :–

**1.** இச்சட்டம் 2007 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, இலங்கைச் சிறுவர், இளைஞர் அரங்கேற்று மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "மன்றம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கைச் சிறுவர், இளைஞர் அரங்கேற்று மன்றத்தின் தற்போதைய உறுப்பினர்களாகவுள்ளவர்களும், இத்தால் அமைத்துருவாக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இலங்கைச் சிறுவர் இளைஞர் அரங்கேற்று மன்றத்தைக் கூட்டிணைத்தல்.

இதன் பின்னர் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை எண்ணிக்கையான ஆட்களும் "இலங்கைச் சிறுவர் இளைஞர் அரங்கேற்று மன்றம்" என்னும் பெயரின்கீழும் மகுடத்தின்கீழும் இடையறா வழியுரிமை கொண்ட கூட்டிணைக் கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் (இது இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்துடன் அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும் படலாம், அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்க வும், பயன்படுத்தவும் மற்றும் விரும்பியாங்கு அதனை மாற்றவும் அது முழுத்தத்துவமும், அதிகாரமும் உடையதாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் அமைத்துருவாக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.—

(அ) சிறுவர்களுக்காகவும், இளைஞர்களுக்காகவும் அரங் கேற்றச் செயற்பாடுகளைப் பொறுப்பேற்றலும், மேம் படுத்துதலும், அனுசரணை செய்தலும் மற்றும் ஒன்றி ணைத்தலும் ;

(ஆ) அவசியமானவிடத்து, சிறுவர்களினதும், இளைஞர்க ளினதும் உள மற்றும் உடல் அபிவிருத்திக்கு உசித மான சூழலை ஏற்பாடு செய்தலும், உருவாக்குதலும் ;

(இ) சமூகத்தில் திருப்திகரமாகப் பணிபுரியக்கூடிய வகையில் தமது சொந்தக் கலாசாரப் பாரம்பரியம் மற்றும் தனித்துவம் பற்றி நன்றாக விருத்திசெய்யப் பட்ட விழிப்புணர்ச்சி உடைய மகிழ்ச்சிமிக்கவர்களா யும், சமநிலைப்படுத்தப்பட்டவர்களாகவும் சிறுவர்க ளையும், இளைஞர்களையும் பயிற்றுவித்தல் ;

(ஈ) இலங்கையில் சிறுவர்கள், இளைஞர்களுக்கிடையில் பல்இன ஒற்றுமையை மேம்படுத்துதல் ;

(உ) கருத்துக்கள், அறிவு மற்றும் அனுபவம் என்பனவற் றைப் பரிமாறிக் கொள்ளுதலை ஏற்பாடு செய்யும் நோக்குடன் ஒரே மாதிரியான குறிக்கோள்களையுடைய

வேறு குழுக்களுடன் ஒன்றிணைதலும், இணைந்து பணியாற்றுதலும் ; அத்துடன்

(ஊ) மேற்படி குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமான வாறான அல்லது உசிதமானவாறான வேறு எல்லா விடயங்களையும் செய்தல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுவான தத்துவங்கள்.

**4.** இச்சட்டத்தினதும் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு அமைவாக, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எவற்றையேனும் மேம் படுத்துவதற்கு அல்லது முன்னேற்றுவதற்கு அவசியமானவா றான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தன்மையனவுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், விடயங்க ளையும் செய்யவும், புரியவும், நிறைவேற்றவும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவத்துள் வங்கிக் கணக்குகளைத் தொடங்குதல், செயற்படுத்துதல், முடிவுறுத்துதல், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றிப் பணங்களைக் கடனாகப் பெறுவதற்கும் அல்லது திரட்டுவதற்கும், அரசு அல்லது வேறு ஏதேனும் குழுக்கள் அல்லது அமைப்புக் களிடமிருந்து கொடைகளையும், நன்கொடைகளையும், வேறு உதவிகளையும் பெறுவதற்கும், அதன் நிதிகளை முதலீடு செய்வ தற்கும் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்று வதற்குத் தேவையான அலுவலர்களையும், சேவையாளர்களையும் வேலையிலீடுபடுத்துதல், வேலைக்கமர்த்துதல், வேலையிலிருந்து நீக்கஞ் செய்தல் ஆகியவற்றுக்கான தத்துவங்களும் அடங்கும் :

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**5.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், அப்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கிணங்க, அத்தகைய விதிகளில் ஏற்பாடு செய்யப்படக்கூடியவாறானவர்களும் அத்தகைய விதிகளுக்கிணங்கத் தெரிவு செய்யப்படுபவர்களும் அல்லது பெயர் குறித்து நியமிக்கப்படுபவர்களுமான ஏழு பேரைக் கொண்ட முகாமைச் சபை ஒன்றினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும். முகாமைச் சபையின் பதவிக்காலம் இரண்டு ஆண்டுகளாதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைச் சபையானது, இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர் முந்திய நாளன்று பதவி வகிக் கின்ற மன்றத்தின் முகாமைச்சபையின் உறுப்பினர்களைக் கொண்டமைதல் வேண்டும். அத்தகைய சபையானது அப்போதைக்கு

வலுவிலுள்ள கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கிணங்க முகாமைச் சபையொன்று தெரிவு செய்யப்படும் வரை அல்லது பெயர் குறித்து நியமிக்கப்படும் வரை பதவிவகித்தலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் உறுப்பாண்மை.*

**6.** (1) கூட்டுத்தாபனத்தின் உறுப்பாண்மையானது சாதாரண உறுப்பினர்களையும் மற்றும் இணை உறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) சபையானது சாதாரண உறுப்பினர்களாகவும் இணை உறுப்பினர்களாவும் இருப்பதற்குத் தகமை அல்லாதவர்களான ஆட்களை அப்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைவாக, அது விதித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய வகுப்புக்களைச் சார்ந்தவர்களான அத்தகைய சிறப்புரிமைகளுடனும் கடப்பாடுகளுடனும் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளலாம்.

(3) இணை உறுப்பினர்களின் தனியான இடாப்பொன்று பேணப்படுதல் வேண்டும் என்பதுடன், அவர்கள் சாதாரண உறுப்பினர்கள் போன்ற அதே சிறப்புரிமைகளை அனுபவித்தலும் வேண்டும். ஆனால், கூட்டுத்தாபனத்தின் கூட்டங்களில் வாக்களிக்கத் தகுதியற்றவர்களாதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் விதிகள்.*

**7.** (1) கூட்டுத்தாபனத்தின் பொதுக்கூட்டம் எதிலும் சமூகமளித்து வாக்களிக்கத் தகுதியான உறுப்பினர்களில் மூன்றில் இரண்டுக்குக் குறையாத பெரும்பான்மை கொண்டும் (கூட்டங்களை நடாத்துதல், கூட்டங்களில் அலுவலைக் கையாளுதல், ஆண்டு அறிக்கைகள் தயாரித்தல் முதலியன உட்பட) கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்வதற்காகவும், அதன் குறிக்கோள்களை எய்துவதற்காகவும், இச்சட்டத்தின் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத அத்தகைய விதிகளைக் காலத்துக்குக் காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்கு சட்ட முறையானதாதல் வேண்டும்.

(2) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு முந்தியநாளன்று வலுவிலுள்ள மன்றத்தின் விதிகள், அவை இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத அளவுக்கு, இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட

கூட்டுத்தாபனத்தின் விதிகளெனக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், உட்பிரிவு (1) இன்கீழ் விதியொன்று ஆக்கப்பட்டதைப் போன்ற அதே முறையில் மாற்றப்படலாம். அதற்குச் சேர்க்கப் படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்பட்ட எவ்விதியும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதியொன்று ஆக்கப்பட்டதைப்போன்ற அதே முறையில் மாற்றப்படலாம், அதற்குச் சேர்க்கப்படலாம், திருத்தப் படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(4) கூட்டுத்தாபன உறுப்பினர்கள் யாவரும் எல்லாக் காலங்களி லும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைந்தோராதல் வேண் டும்.

அசைவுள்ளதும், அசைவற்றது மான ஆதனங்களை வைத்திருப்பதற் கான கூட்டுத்தாப னத்தின் தத்துவம்.

**8.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும், அப்போதைக்கு வலுவி லுள்ள கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கும் அமைவாகக் கூட்டுத்தா பனமானது—

(அ) கொள்வனவு, கொடுத்து மாற்றுதல், கொடை, மரண சாதனக் கையளிப்பு அல்லது மரணசாதனக் கொடை என்றவாறு அல்லது வேறு ஏதேனும் முறையில் எத்தன்மைத்தானதுமான அல்லது எவ்வகுதியின தானதுமான அசைவுள்ள அல்லது அசைவற்ற ஏதே னும் ஆதனத்தைக் கொள்ளுவதற்கும் இடையறா வழியுரிமையாக அல்லது ஏதேனும் குறைந்த காலப் பகுதிக்கு ஏதேனும் வெளிப்படையான நம்பிக்கைப் பொறுப்புக்கு அமைவாக அல்லது வேறு வகையாக வைத்திருப்பதற்கும் ;

(ஆ) கூட்டுத்தாபனத்துக்கு உரித்தாக்கப்பட்ட அல்லது கூட்டுத்தாபனத்தினால் கொள்ளப்பட்ட அல்லது வைத்திருக்கப்பட்ட ஏதேனும் அசைவற்ற ஆதனத்தில் ஏதேனும் கட்டிடத்தை நிறுவுவதற்கும் ; அத்துடன்

(இ) ஏதேனும் அத்தகைய ஆதனத்தை விற்பதற்கு, கொடை யளிப்பதற்கு, உரித்து மாற்றுவதற்கு, சாட்டுதல் செய்வதற்கு, ஈடுவைப்பதற்கு, குத்தகைக்கு விடுவதற்கு,

கொடுத்து மாற்றுவதற்கு அல்லது வேறு வகையாகக் கையுதிர்ப்பதற்கும்,

சட்டப்படி இயலுமானதாகவும், தகுதியுடையதாகவும் இருத்தல் வேண்டும்.

கட்டணங்களையும், ஒப்பப்பணங்களையும் அறவிடுவதற்குள்ள தத்துவம்.

**9.** கூட்டுத்தாபனமானது, அதனால் ஏற்பாடு செய்யப்பட்ட சேவைகள் தொடர்பில் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடமிருந்து அது நியாயமானதெனக் கருதுகின்றவாறான அத்தகைய கட்டணங்களையும், ஒப்பப்பணங்களையும் விதிப்பதற்குச் சட்டப்படி இயலுமானதாதலும், தகுதியுடையதாதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் கணக்குகள்.

**10.** (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது, அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும், பொறுப்புக்களும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல், வாங்கல்கள் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒரு தகைமைபெற்ற கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவில் "தகைமை பெற்ற கணக்காய்வாளர்" என்பது, —

(அ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராகவுள்ள அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும் அத்துடன் அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளார் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ஆ) கணக்காளர் குழுமமொன்றில் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக்கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராகவும் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்

தின் உறுப்பினரொருவராகவும் அத்துடன் அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் இருக்கின்றதான கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

மன்றத்தினால் செலுத்தப் படற்பாலனவும் மன்றத்திற்குச் செலுத்தப் படற்பாலனவுமான தனிசுகள்.

**11.** இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று மன்றத்திற்கு இருந்துவந்துள்ள எல்லாத் தனிசுகளும், பொறுப்புக்களும் இத்தால் அமைத்துரு வாக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று மன்றத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும் மற்றும் செலுத்தப்படுவதற்குரிய ஒப்பப் பணங்கள், உதவுதொகைகள் யாவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

**12.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது கூட்டுத்தாபனத்தின் அனுமதியுடனும், கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டவாறான அத்தகைய எண்ணிக்கையான ஆட்கள் முன்னிலையிலுமன்றி எத்தன்மைத்தானதுமான சாதனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாது. அவர்கள் சமுகமாயிருந்ததற்கு அத்தாட்சியாக அச்சாதனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய கையொப்பமிடுதலானது எவரேனுமாள் சாட்சியாகக் கையொப்பமிடுவதிலிருந்து தனிவேறானதாதலும் வேண்டும்.

குடியரசினதும், மறுபேரினதும் உரிமைகளைப் பேணுதல்.

**13.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளது எதுவும் குடியரசின் உரிமைகளையேனும் ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் இச்சட்டத்திற் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்கள் மூலம், அவர்களிலுருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமைகோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களின் உரிமைகளையேனும் பங்கப்படுத்துவதாகவோ அல்லது பாதிப்பதாகவோ இருத்தலாகாது.

*கலைப்பின் மீது எஞ்சியிருக்கும் ஆதனம்.*

**14.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன் மேல் அதனது எல்லாக் கடன்களையும், பொறுப்புக்களையும் திருப்தி செய்ததன் பின்னர் எத்தன்மைத்தானதுமான ஏதேனும் ஆதனம் விஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது. ஆனால் கூட்டுத்தாபனத்தின் குறிக் கோள்களையொத்த குறிக்கோள்களைக் கொண்டதும் அல்லது கொண்டவையும் அத்துடன் அதன் எந்த நிறுவனம் அல்லது நிறுவனங்கள் அதன் அல்லது அவற்றின் உறுப் பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளிப்ப திலிருந்து அதன் அல்லது அவற்றின் விதிகளினால் தடைசெய்யப் பட்டுள்ளதோ அல்லது தடை செய்யப்பட்டுள்ளனவோ அந்த வேறேதேனும் நிறுவனமாக அல்லது நிறுவனங்களாக இருப்பது மான நிறுவனத்துக்கு அல்லது நிறுவனங்களுக்குக் கொடுக்கப் படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**15.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*